Registered as a Newspaper

# உதயன்

மலர் : 41
இதழ் : 150

திங்கட்கிழமை
04 மே 2026

சித்திரை 21 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் -12
விலை - ரூபா 50



## பலாலியில் உள்ள காணிகளை விடுவிக்க அரசு நடவடிக்கை

### இளங்குமரன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 4

வலி.வடக்கில் இராணுவ மருத்துவமனையைச் சூழவுள்ள மக்களின் காணிகள் விடுவிக்கப்படும். அதன் கிழக்குப் பக்கமாக உள்ள பொதுமக்களின் காணிகளையும் முழுமையாக விடுவிக்க நாம் முயற்சிகளை எடுத்துள்ளோம் என்று தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் தெரிவித்தார். »11

## பெற்றோல், டீசலுடன் இரு கப்பல்கள் வருகை

கொழும்பு, மே 4
பெற்றோல் மற்றும் டீசல் அடங்கிய இரு கப்பல்கள் கொழும்புத்துறைமுகத்தை வந்தடைந்துள்ளன. தற்போது இலங்கைப் பெற்றோலியக்கூட்டுத்தாபனத்தின் முனையங்களில் இவற்றை இறக்கும் பணிகள் மும்முரமாக நடைபெறுகின்றது.
முதலாவது கப்பலில் 20,000 மெட்ரிக் »11

## வாகன விலைகள் அதிகரிக்கலாம்

கொழும்பு, மே 4
வாகனங்களின் விலைகள் அதிகரிக்கக்கூடும் என்று இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் பிரசாத் மானகே தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-
டொலருக்கு நிகரான ரூபாவின் மதிப்பு வீழ்ச்சியடைந்ததே இதற்குப் பிரதான காரணம். »11

## மயங்கி வீழ்ந்தவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மே 4
கடைக்குச் சென்றபோது வீதியில் மயங்கி வீழ்ந்தவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.
இந்தச் சம்பவம் அராலி மத்தி, வட்டுக்கோட்டையில் நடந்துள்ளது.
வி.திருவருட்சோதி »11

### தையிட்டி விகாரைக்கு அருகில் உள்ள

## வீதி விடுவிக்கப்படுவதை தடுப்பதற்கு முயற்சி!

### அரசாங்கத் தரப்பிலிருந்து குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மே 4
தையிட்டியில் விகாரைக்கு அருகில் உள்ள வீதியை விடுவிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. அதை அறிந்துகொண்டு அதைக் குழப்பும் வகையிலான நடவடிக்கைகளே சில அரசியல்வாதிகளால் தற்போது முன்னெடுக்கப்படுகின்றன என்று தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் குற்றஞ்சாட்டியுள்ளார். »11

## வடக்கு, கிழக்கில் மழைக்கு வாய்ப்பு

யாழ்ப்பாணம், மே 4
எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை மன்னார் வளைகுடாக் கடற்பரப்பில் புதிய வளிமண்டல மேலடுக்குச் சுழற்சியொன்று உருவாகித் தாழ்வு நிலையாக வலுப்பெறுமென எதிர்பார்க்கப்படுகின்றது என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப் பீடாதிபதியும், வானிலை ஆய்வாளருமான பேராசிரியர். »11

## இலங்கை வந்தடைந்தார் மாலைதீவு ஜனாதிபதி



கொழும்பு, மே 4
மாலைதீவு ஜனாதிபதி கலாநிதி முகமது முய்ஸு இலங்கைக்கு உத்தியோகபூர்வ பயணம் ஒன்றை மேற்கொண்டு நேற்று மாலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார். ஜனாதிபதியுடன் மாலைதீவின் முதல் பெண்மணி மற்றும் 20 உயர் அதிகாரிகள் அடங்கிய தூதுக் குழுவினரும் வந்துள்ளனர். »11

## ஐ.ஓ.சி. எரிபொருள் விலையும் அதிகரிப்பு

விரிவு பக்கம்:-03

## ஜனாதிபதி அநுர விசேட உரை

கொழும்பு, மே 4
அவுஸ்திரேலிய கடன் வழங்குநருக்கு திறைசேரியால் செலுத்தப்பட்ட 2.5 மில்லியன் டொலர் மூன்றாம் தரப்பினரால் மோசடி செய்யப்பட்ட விவகாரம் தொடர்பில் நிதியமைச்சரான ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நாளை செவ்வாய்க்கிழமை நாடாளு »11

## மீனவர்கள் மாயம்



முல்லைத்தீவு, மே 4
முல்லைத்தீவு கடற்கரையில் இருந்து மீன்பிடிக்காகச் சென்ற இரு கடற்தொழிலாளர்கள் கரை திரும்பவில்லை என்று முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
கள்ளப்பாடு பகுதியில் இருந்து நேற்றுமுன்தினம் படகு ஒன்றில் »11

## காலி சிறைக்குள் துப்பாக்கிச் சூடு

கொழும்பு, மே 4
காலி சிறைச்சாலைக்குள் நேற்றுத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று நடந்துள்ளது.
சிறைச்சாலையில் இருந்து இரண்டு கைதிகள் தப்பியோட முற்பட்ட போது, சிறைச்சாலை அதிகாரிகளால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது என பொலிஸ் »11

## மாயமாக மறைந்த 2.5 மில். டொலர் சர்வதேச மட்டங்களில் விசாரணை

கொழும்பு, மே 4
இலங்கைத் திறைசேரியின் மின்னஞ்சல் கட்டமைப்புக்குள் சட்டவிரோதமாக ஊடுருவி, 2.5 மில்லியன் அமெரிக்க டொலர் மோசடி செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில், அமெரிக்காவின் மத்திய புலனாய்வுப் பிரிவின் (எப்.பி.ஐ) உதவியைப் பெறப் புலனாய்வாளர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.
இந்தத் தகவலைக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் உறுதிப்படுத்தியுள்ளார் என கொழும்பு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது. »11

முச்சந்தி முரளி

"நித்திய கண்டம் பூரண ஆயுசு எண்டமாதிரி எப்பவும் மீனவர் குடும்பங்கள்ஏக்கத்தோட இருக்கோணும் எண்ட விதி எப்ப மாறும்?"

மக்கள் ... தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 03.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4420 |
| ஆங்கில எழுத்து | Q |
| வெற்றி இலக்கங்கள் | 54 57 59 68 |
| விசேட எழுத்து | Q |

| ஹந்தஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 03.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1487 |
| வெற்றி இலக்கினம் | மீனம் |
| வெற்றி இலக்கங்கள் | 11 38 45 55 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 03.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0446 |
| ஆங்கில எழுத்து | U |
| வெற்றி இலக்கங்கள் | 6 6 5 7 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 03.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2526 |
| ஆங்கில எழுத்து | R |
| சுப்பர் இலக்கம் | 25 |
| வெற்றி இலக்கங்கள் | 05 66 67 74 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 03.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6178 |
| ஆங்கில எழுத்து | M |
| வெற்றி இலக்கங்கள் | 2 1 6 0 7 8 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 03.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2208 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கங்கள் | 23 48 67 77 |
| விசேட எழுத்து | E |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 03.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0294 |
| வெற்றி இலக்கினம் | மகரம் |
| வெற்றி இலக்கங்கள் | 05 09 58 |

# 9 ஆண்டுகளாக முடக்கப்பட்டுள்ள மாகாணசபைத் தேர்தலை நடத்துக!

## எதிர்க்கட்சி வலியுறுத்து

கொழும்பு,மே.4

**அரசாங்கத்தின் மீது நம்பிக்கை இருப்பின், கடந்த 9 ஆண்டுகளாகப் பிற்போடப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்திக் காட்டுங்கள் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டியுள்ளது.**

இதுதொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிக்கையில்,

அடுத்த பத்து ஆண்டுகளுக்கு தேசிய மக்கள் சக்தியின் ஆட்சி நிலைக்கும் என்ற ஜனாதிபதியின் கருத்தானது ஜனநாயகத்துக்கு எதிரானது. மக்கள் ஆணை என்பது மேடைகளில் சுயமாகப் பிரகடனப்படுத்திக் கொள்வதல்ல. அது தேர்தல் களங்களில் மக்களால் தீர்மானிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். அரசாங்கத்தின் மீது நம்பிக்கை இருந்தால், கடந்த 9 ஆண்டுகளாகப் பிற்போடப்பட்டுள்ள மாகாணசபைத் தேர்தலை உடனடியாக நடத்திக் காட்டுங்கள். தேர்தல்களைப் பிற்போடுவதன் மூலம் மக்கள் கருத்தை மறைக்க முடியாது. மாகாணசபைத் தேர்தலை எதிர்கொள்வதன் மூலமே அரசாங்கத்தின் மீதான மக்களின் உண்மையான மனநிலை வெளிப்படும். மக்கள் ஆணை என்பது அநுரவோ அல்லது தேசிய மக்கள் சக்தியோ அல்ல. தேர்தலை நடத்துங்கள், அதில் மக்கள் வழங்கும் தீர்ப்பை ஏற்றுக்கொள்ள நாங்கள் தயாராக இருக்கிறோம்- என்றார். (ச-இ)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 03.05.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| வெற்றி வாரம் | 0886 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கம் | 7 6 9 7 2 9 |

| Super Ball DLB | |
|---|---|
| திகதி | 03.05.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3152 |
| ஆங்கில எழுத்து | O |
| வெற்றி இலக்கம் | 02 07 77 80 |

| சனிதா DLB | |
|---|---|
| திகதி | 03.05.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | J |
| வெற்றி இலக்கம் | 23 24 60 69 |
| வெற்றி வாரம் | 5313 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | 03.05.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| வெற்றி வாரம் | 0982 |
| வெற்றி இலக்கம் | 21 22 26 |

| லக்ன ராசி DLB | |
|---|---|
| திகதி | 03.05.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| மகரம் | |
| வெற்றி இலக்கம் | 07 11 26 28 |
| சீட்டிழுப்பு வாரம் | 4864 |

| KAPRUKA DLB | |
|---|---|
| திகதி | 03.05.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | X |
| சுப்பர் இலக்கம் | 18 |
| வெற்றி இலக்கம் | 17 24 33 44 |
| வெற்றி வாரம் | 2328 |

| அத கோடிபதி DLB | |
|---|---|
| திகதி | 03.05.2026 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கம் | 02 21 48 75 |
| வெற்றி வாரம் | 2978 |

## உலகத்தமிழ் மாநாட்டுக்கு ஆய்வுக்கட்டுரைகள் கோரல்

யாழ்ப்பாணம்,மே 4

செய்யறிவு உலகில் செம்மொழித் தமிழும் தமிழரும் எனும் கருப்பொருளில் கனடா ரொரண்டோ மாநகரில் நடைபெறவுள்ள உலகத்தமிழ் ஆய்வு மாநாட்டுக்கு ஆய்வுக்கட்டுரைகள் கோரப்பட்டுள்ளன. எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 10 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை இந்த மாநாடு நடைபெறவுள்ளது. இந்த மாநாடு உலகம் முழுவதுமுள்ள அறிஞர்கள், ஆய்வாளர்கள் மற்றும் கல்வியாளர்களை ஒன்றிணைத்துச் செம்மொழித் தமிழ், செய்யறிவு, மெய்ப்பொருளியல், பண்பாடு, புலம்பெயர் வாழ்வு, உலகமயமாதல், வரலாறு, பொருண்மிய மேம்பாடு ஆகிய துறைகளின் இணையிசைவுகளை ஆராய்வதற்கான அறிவியற்தளமாக அமையும். இதற்காக தமிழும் செய்யறிவும், மெய்ப்பொருளியலும் பண்பாடும்,

பொருளியல் சிந்தனையும் வாழ்வியலும், தமிழர் வரலாறும் வாழ்வியலும், வடகிழக்குப் பொருண்மிய மேம்பாடு உள்ளிட்ட தலைப்புகளில் ஆய்வுகள் தமிழ் அல்லது ஆங்கிலம் மொழியில் கோரப்பட்டுள்ளன.

குறித்த ஆய்வுச் சுருக்கம் 250-300 சொற்களில் அமைதல் வேண்டும். அத்துடன் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும். கிடைக்கும் அனைத்து ஆய்வுச் சுருக்கங்களும் மாநாட்டு ஆய்வுக் குழுவினரால் விரிவாக ஆய்வு செய்யப்பட்டு, தெரிவு செய்யப்படும் ஆய்வுச் சுருக்கங்களை எழுதியோர் ஆய்வுக் கட்டுரை எழுதுமாறு வேண்டப்படுவர். முழுமையான ஆய்வுக் கட்டுரைகள் 3 ஆயிரம் சொற்களுக்கு மிகாமலும், ஒருங்குறி எழுத்துரு 12 அளவிலும் அமைதல் வேண்டும். கட்டுரைகளை எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பவேண்டும். தெரிவு செய்யப்படும் இலங்கை மற்றும் இந்தியக் கட்டுரையாளர்களுக்குக் கனடா சென்று வருவதற்கான வான்வழிச் செலவுச்சீட்டும், கனடாவில் தங்குமிட வசதிகளும் வழங்கப்படும். இந்த மாநாடு தொடர்பான விளக்கங்களை www.GlobalTamilConfer ence.org என்னும் இணையத்தளத்தில் பார்வையிட முடியும் என்று ஏற்பாட்டுக்குழுவினர் அறிவித்துள்ளனர். (சு-27,20)

## மஹிந்த, பியங்கர ஜயரத்னவுக்கு இலஞ்ச ஆணைக்குழு அழைப்பு!

கொழும்பு,மே 4

சர்ச்சைக்குரிய 2013ஆம் ஆண்டு எயார் பஸ் கொடுக்கல் வாங்கல் தொடர்பான விசாரணைகளுக்காக, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச மற்றும் முன்னாள் அமைச்சர் பியங்கர ஜயரத்ன ஆகியோரை மே மாதம் 12ஆம் திகதி வாக்குமூலம் அளிக்குமாறு இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அறிவித்துள்ளது.

2013ஆம் ஆண்டு ஸ்ரீலங்கன் விமான சேவைக்காக 6 எயார்பஸ் A330 ரக விமானங்களையும், 8 எயார்பஸ் A- 350 ரக விமானங்களையும் கொள்வனவு செய்த போது, 2 மில்லியன் அமெரிக்க டொலரை இலஞ்சமாகப் பெற்றதாக அப்போதைய ஸ்ரீலங்கன் விமான சேவையின் தலைமை நிர்வாக அதிகாரி கபில சந்திரசேன மற்றும் அவரது மனைவி நியோமாலி விஜேநாயக்க ஆகியோர் மீது குற்றஞ்சுமத்தப்பட்டது.

இதுதொடர்பாக இலஞ்ச ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணைகளுக்கு அமைவாக, சந்தேக நபரான கபில சந்திரசேன கடந்த மார்ச் மாதம் 12ஆம் திகதி இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் கைதுசெய்யப்பட்டு நாளை செவ்வாய்க்கிழமை வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தகது. (ச-இ)



## யாழ்.மருத்துவச் சங்கத்தால் மரநடுகைத் திட்டம் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மே 4

யாழ்ப்பாண மருத்துவச் சங்கம், யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடம் மற்றும் நல்லூர்ப் பிரதேசசபை ஆகியவற்றுடன் இணைந்து "Green Jaffna Project" என்னும் மரநடுகைச் செயற்றிட்டத்தை ஆரம்பித்துள்ளது.

முதற்கட்டமாக ஆடியபாதம் வீதி, பொற்பதி வீதி ஆகிய வீதிகள் உள்வாங்கப்பட்டுள்ளன.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கு முன்பாக நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்வில், வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர், யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட பீடாதிபதி, யாழ்ப்பாண மருத்துவச் சங்கப் பிரதிநிதிகள், நல்லூர் பிரதேசசபையின் தவிசாளர் மற்றும் செயலாளர், யாழ்.மாநகரசபை ஆணையாளர், மருத்துவ நிபுணர்கள், யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் மற்றும் சமூக ஆர்வலகள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (சு-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




# மின்-சிகரெட்டுகளுக்கு முழுமையான தடை!

## விரைவில் நடைமுறை

**கொழும்பு,மே 4**

**இலங்கையில் மின்-சிகரெட்டுகளை முழுமையாகத் தடை செய்யவும், வருங்காலத் தலைமுறையினரை புகையிலைப் பழக்கத்திலிருந்து முழுமையாகப் பாதுகாக்கவும் சட்டத்திருத்தங்களை மேற்கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.**

இதுதொடர்பில் புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகாரசபையின் தலைவர் கலாநிதி ஆனந்த ரத்நாயக்க தெரிவிக்கையில், தற்போது நடைமுறையிலுள்ள சட்டங்களில் திருத்தம் மேற்கொண்டு மின்-சிகரெட்டுகள் விற்பனை, இறக்குமதி, உற்பத்தி ஆகியவற்றுடன் அவற்றைப் பயன்படுத்துவதையும் முழுமையாகத் தடைசெய்யப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. 2010 ஆம் ஆண்டுக்குப் பிறகு பிறந்த எவரும் தமது வாழ்நாளில் சிகரெட் அல்லது புகையிலைப் பொருள்களைக் கொள்வனவு செய்ய முடியாதவாறு சட்டங்கள் திருத்தப்படவுள்ளன. புகையிலைப்பொருள்களை விற்பனை செய்யும் போது, வாடிக்கையாளரின் அடையாள அட்டையைச் சோதித்து அவர் 2010க்கு முன் பிறந்தவரா என்பதை உறுதிப்படுத்தும் அதிகாரம் விற்பனையாளர்களுக்கு வழங்கப்படும். எதிர்காலத் தலைமுறையினரைப் புகையிலை மற்றும் மதுசாரத்தினால் ஏற்படும் தீமைகளிலிருந்து பாதுகாப்பதே எமது நோக்கம் - என்றார். (ச-இ)

## தமிழருவி சிவகுமாரன் மலேசியாவில் பேருரை

கோலாலம்பூர்,மே.4

மலேசியா சுல்தான் இத்ரிஸ் கல்விப் பல்கலைக்கழகம் நடத்தும் ஆறாவது பன்னாட்டுத் தமிழ்க் கல்வி ஆராய்ச்சி மாநாட்டில், தமிழருவி த.சிவகுமாரன் சிறப்புப் பேருரைகள் ஆற்றவுள்ளார். எதிர்வரும் 9,10ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள மாநாட்டில், முதல்நாள் வள்ளுவத்தில் வாழ்வியல் கல்வி எனும் தலைப்பிலும், இரண்டாம் நாள் ஈழத்துக் கல்விப் பாரம்பரியத்தில் பண்டிதர், வித்துவான் வழிக் கற்பித்தல் மரபு எனும் தலைப்பிலும் பேருரை ஆற்றவுள்ளார். அத்துடன் கோலாலம்பூர், ஸ்கொட் ரோட் முருகன் ஆலயம், செரம்பான் அம்பாள் ஆலயம் ஆகியவற்றில் சிறப்புரைகளையும், காஜாங் ஸ்ரீமுருகன் ஆலயத்தில் கந்தபுராண சாரம் எனும் தலைப்பிலும் சொற்பொழிவையும் ஆற்றுவார். தொடர்ந்து மலேசியா பெற்றாலிங் ஜாயாவில் நடைபெறவுள்ள காரைமலாயா ஒன்றியத்தின் ஆண்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு காரைநகர் தந்த செல்வங்கள் எனும் தலைப்பில் சிறப்புரையாற்றவுள்ளார். (க-66)

## இலங்கை 'லைசென்ஸ்' இத்தாலியில் அங்கீகாரம்

கொழும்பு,மே 4

இலங்கை மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளுக்கு இடையிலான சாரதி அனுமதிப்பத்திரங்களை பரஸ்பரமாக அங்கீகரிக்கும் ஒப்பந்தம் ஏப்ரல் மாதம் முதல் நடைமுறைக்கு வந்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் அறிவித்துள்ளார்.

இதற்கமைய, இத்தாலியில் குறைந்தபட்சம் ஆறு ஆண்டுகள் வதிவிடமாகக் கொண்டுள்ள இலங்கைப் பிரஜைகள், எழுத்துமூல அல்லது செயன்முறைப் பரீட்சைகள் ஏதுமின்றி தமது இலங்கையின் சாரதி அனுமதிப்பத்திரங்களை இத்தாலிய சாரதி அனுமதிப்பத்திரமாக மாற்றிக்கொள்ளமுடியும்.

வெளிவிவகார அமைச்சு மற்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் தொடர்ச்சியான இராஜதந்திர ஈடுபாடுகளைத் தொடர்ந்து இந்த ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டுள்ளது.

இதன் மூலம் அவர்களின் வேலைவாய்ப்புகளை மேம்படுத்தவும், புலம்பெயர் சமூகத்தின் பங்களிப்பை மேலும் வலுப்படுத்தவும் உதவும் என அமைச்சர் விஜித ஹேரத் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## ஐ.ஓ.சி. எரிபொருள் விலையும் அதிகரிப்பு

கொழும்பு,மே 4

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நேற்றுமுன்தினம் எரிபொருள் விலைகளை அதிகரித்ததைத் தொடர்ந்து லங்கா ஐ.ஓ.சி. நிறுவனமும் தனது விலைகளை அதிகரித்துள்ளது.

இதற்கமைய, லங்கா ஒட்டோ டீசல் ஒரு லீற்றரின் விலை 392 ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், 92 ரக பெற்றோல் ஒரு லீற்றரின் விலை 410 ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, ஏனைய எரிபொருள் வகைகளின் விலைகளில் எந்தவொரு மாற்றத்தையும் செய்யாமல் இருக்க லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது. (ச-இ)

## போதைப்பொருள் கடத்தல்; 22 தேரர்களுக்கும் மறியல்

கொழும்பு,மே 4

தாய்லாந்திலிருந்து 110 கிலோகிராமுக்கும் அதிகமான குஷ் மற்றும் ஹஷீஸ் ரக போதைப்பொருள்களைக் கடத்திவந்த விவகாரத்தில் கைதுசெய்யப்பட்ட 22 தேரர்களையும் எதிர்வரும் மே மாதம் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீர்கொழும்பு மேலதிக நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கட்டுநாயக்க சர்வதேச விமானநிலைய வரலாற்றிலேயே ஒரே நேரத்தில் இவ்வளவு பெரிய தொகையான போதைப்பொருள் தேரர்களால் கடத்தி வரப்பட்டிருப்பது இதுவே முதல் முறையாகும்.

வெளிநாட்டிலிருந்து இந்தச் சதியை வழிநடத்திய 'தம்மா' என்ற தேரரைக் கைதுசெய்வதற்கான சர்வதேச விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுவருவதாக உதவிப் [illegible] வித்தார். (ச-இ)

## மறந்து போன கடிதம்

**வெள்ளம் வரமுதல் அணை கட்டினால் ஆருக்கும் ஒரு பிரச்சினையும் வராது. ஆனால் நாங்கள் எப்பவும் வெள்ளம் தலைக்கு மேல வந்தபிறகுதான் மண்வெட்டியைத் தூக்கிக்கொண்டு ஓடுவம். அதுக்குள்ள எல்லாம் குடிமுழுகிப் போடும். இப்ப ஏன் இந்தக் கதையெண்டதுக்கும் ஒரு காரணம் இருக்கு. தமிழக மீனவர்மாரிட்ட கொள்ளையடிக்க வெளிக்கிட்டதெண்டு யாழ்ப்பாணத்துக்காரர் ஒருத்தரைப் பிடிச்சு வைச்சிருக்கினமெல்லோ, அந்த விசயத்திலையும் முதலே சேய்ய வேண்டியதைச் செய்திருந்தால் இவ்வளவு சிக்கல் வந்திருக்காது. ஆனால் அதைச் செய்யாமல் வழக்கம் மாதிரி அலட்சியம் காட்டினபடியாலதான் நிலைமை கைமீறிப் போய் இந்தளவில வந்து நிக்குது.**

**தமிழக மீனவர்மார் பிடிச்சுக்கொண்டு போனவரும், அவரின்ர ரண்டு கூட்டாளி மாரும் எங்கட மீனவர்மாரை கெடிகலங்க வைச்ச ஆக்கள் எண்டு முதலே பட்சி சொன்னதெல்லோ. அவையின்ர அட்டகாசம் தாங்கமுடியாமலும், உந்தக் கள்ளப்பூனையளுக்கு எப்பிடி மணி கட்டுறது எண்டு தெரியாமலும் தவிச்சவை. ஏனெண்டால் இவையள் மூண்டு பேரும் வந்து கத்தியைக் காட்டி வெருட்டி மீன்களை அள்ளுறதும், காசைப் பறிக்கிறதும், வலையை இழுத்துக்கொண்டு போறதுமா இருந்தால் பாடுபட்டுத் தொழில் செய்யிறவையும் அவையின்ர குடும்பமும் பட்டினியில சாகவேண்டியதுதான் நேவியிட்டயோ பொலிஸிட்டையோ போய் முறைப்பாடு குடுத்தால் அவை களவெடுத்ததுக்கு ஆதாரம் கேப்பினம். கடலுக்க நடந்ததுக்கு எங்க போய் சாட்சியைத் தேட? கடல் தான் சாட்சி. அதால அவையள் இந்த மூண்டுபேரையும் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கோணும் எண்டு தங்கட மீனவர் சங்கத்தால மீன்பிடி அமைச்சருக்கு கடிதம் ஒண்டு எழுதி ஏப்ரல் 12 ஆம் திகதி குடுத்திருக்கினம். ஆனால் அந்தக் கடிதத்துக்கு அமைச்சர் ஒரு நடவடிக்கையும் எடுக்கேலை. அதுக்குப் பிறகுதான் அந்த மூண்டுபேரும், இந்தியாக் கடலில போய் வாலாட்ட வெளிக்கிட்டு, அதில ஒருத்தர் பிடிபட்டவர்.**

**அங்க பிடிபட்டவர் உண்மையிலையே கடற்கொள்ளைக்காரர் தான் எண்டு பலாலி மீனவர் சங்கக்காரர் பொதுவெளியில சொன்னவை. அப்பிடிச் சொன்னவைக்கு பிடிபட்ட ஆளின்ர குடும்பமும், கூட்டாளிமாரும் கொலை அச்சுறுத்தல் விட்டிருக்கினமாம். இனியும் விட்டால் சிக்கல் எண்டு மீனவர் சங்கக்காரர் எல்லாரும் சைன் வைச்சு இன்னொரு கடிதத்தை மீன்பிடி அமைச்சரிட்டக் குடுத்திருக்கினம். அப்ப அவையள் தாங்கள் 12ஆம் திகதி தந்த கடிதத்துக்கு நடவடிக்கை எடுத்திருந்தால் இந்தளவு சிக்கல் எல்லாம் வந்திருக்காது எண்டுன் மீனவர்மார் அமைச்சருக்கு சொல்லியிருக்கினம். அப்ப அமைச்சர், இதுக்கு முதல் கடிதம், தந்தீங்களா? எண்டு புதிசாக் கேக்கிறமாதிரிக் கேட்டிருக்கிறார். கடிதம் குடுத்ததையே மறக்கிறவரிட்ட நடவடிக்கை எடுப்பார் எண்டு எதிர்பாக்கலாமோ?**

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை


## அனலும் நீரும்..!

இலங்கையை குறிப்பாக யாழ்ப்பாணக் குடா நாட்டை அனல்நிலை இறுகப்பிடித்திருக்கின்றது. அதீத வெப்பமென்பது நாடு முழுவதும் பொதுவான விடயமாக உள்ளபோதிலும், அண்மைய நாள்களாக ஆங்காங்கே மழைவீழ்ச்சி பதிவாகி வருகின்றது. ஆனால், குடாநாட்டின் நிலையோ மிகப்பரிதாபம். தீவகப் பகுதிகளில் வெம்மையின் தாக்கத்தால் விலங்குகள் உயிரிழக்கும் அளவுக்கு நிலைமை கைமீறியுள்ளது. இதேநிலை நீடித்தால், குடா நாட்டில் குடிதண்ணீர்ப் பற்றாக்குறை தீவிரமாகும் என்று முன்னெச்சரிக்கை விடுத்துள்ளனர் துறைசார் நிபுணர்கள். கோடை காலத்தில் குடாநாட்டுக்குக் குடிதண்ணீர்ப் பற்றாக்குறை தொடர்பான எச்சரிக்கை விடுக்கப்படுவது வருடாவருடம் நடைபெறும் விடயமாக மாறிவிட்டது. ஏன் இந்த நிலைமை? பல வருடங்களாக இந்தப் பின்னடைவை சரிசெய்ய முடியாமைக்கு என்ன காரணம்? என்ற பரிசீலனைகள் மிகவும் அவசியமாக அமைகின்றன.


வறட்சி உக்கிரமாகி தண்ணீர் இருப்பிழப்பு ஏற்படும்போது எங்கள் சிந்தனையும் செயற்பாடுகளும் ஏதோ அந்தப் பருவகாலத்தைக் கடத்திவிட்டாற்போதும் என்பதாகவே அமைகின்றன. வறட்சி வலயங்களுக்கு தண்ணீர் விநியோகிப்பது, அனுமதிக்கப்பட்ட ஏக்கருக்குள் பயிர்செய்கையை மேற்கொள்வது இவ்வாறுதான் வறட்சிக் காலத்தில் அரசாங்கத்தின் திட்டங்கள் அமைகின்றன. பொது மக்களும்கூட இத்தகைய சிந்தனைப் பிறள்வான திட்டங்களையே தீர்வாகவும் வறட்சி நிவாரணமாகவும் ஏற்கின்றனர் - எதிர்பார்க்கின்றனர். ஆனால், மழைக்காலத்தில் 'எதிர்காலத் தேவை கருதிய' தண்ணீர் சேமிப்புத் தொடர்பில் எவரும் சிந்தித்த தாக இல்லை. இன்னும் சொல்லப்போனால் இந்த விடயத்தில் பூர்வாங்க நடவடிக்கைகளைக்கூட நாங் கள் மேற்கொண்டதில்லை.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இன்று ஒப்பீட்டளவில் குளங்கள் குறைவு என்றாலும் இற்றைக்கு மூன்று தசாப்தங்களின் முன்னர் இருந்த நிலைமையோ வேறு. மிகப்பெரியளவிலான நீர்த்தேக்கங்களாக இல்லாவிட்டாலும் ஏராளம் சிறுகுளங்கள் இந்தப் பூமியில் நிறைந்திருந்தன. ஆனால் இன்று அவ்வாறான பலநூறு குளங்களைக் காணவேயில்லை. பல குளங்கள் மண்நிரவப்பட்டு குடிமனைகள் ஆகிவிட்டன. இவ்வாறான ஏராளம் குளங்களை இல்லாமல் செய்துவிட்டு இன்று குளங்கள் இல்லை, தண்ணீர் இல்லை, வறட்சி தாண்டவமாடுகின்றது என்றால் இதில் யாரைத்தான் நோவது? ஒட்டு மொத்தமாக அரசாங்கத்தை நோக்கி விரல் நீட்டும் விவகாரமும் இதுவல்ல. தனிமனித சமூக செயற்பாடுகள்தான் சிறுகுளங்களை இல்லாமலாக்கியது. தண்ணீருக்குத் திண்டாடும் நிலையை வலிந்து ஏற்படுத்தியது. ஆதலால், இதற்குப் பிராயச்சித்தம் தேடவேண்டிய கடப்பாடும் -பெரும்பொறுப்பும் எமக்கே உள்ளது.

பொது அமைப்புகள் இல்லாத கிராமங்கள் இன்றில்லை. இன்னும் சொல்லப்போனால் ஒவ்வொரு கிராமத்திலும் குறைந்தது ஐந்து தொடக்கம் பத்து வரையிலான பொது அமைப்புகள் இருக்கவே செய்கின்றன. எனவே, குளங்களை அடையாளப் படுத்தி அவற்றைப் பாதுகாக்கும் திட்டங்களையும், மீளுருவாக்கம் செய்யும் நடவடிக்கைகளையும் அனைத்துப் பகுதிகளிலும், குறிப்பாகக் கிராமங்கள்தோறும் பலப்படுத்தவேண்டும். குளங்கள் உள்ளிட்ட நீரேந்து பகுதிகளை இந்தக் கோடையில் தூய்மைப்படுத்தி தண்ணீரைச் சேமித்தால் மட்டுமே அடுத்த கோடையிலாவது ஓரளவேனும் நிவாரணம் கிடைக்கும். பிரதேசசபைகள் முழுமையான வேகத்துடன் இயங்கும் நிலையில் இந்தத் திட்டங்களைச் சாத்தியப்படுத்துவது அவ்வளவு சிரமமான விடயமல்ல.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com




### பொய்யாமொழி

**தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்**

**பொருள்:** ஒருவன் தினையளவாகிய உதவியைச் செய்த போதிலும் அதன் பயனை ஆராய்கின்றவர், அதனையே பனையளவாகக் கொண்டு போற்றுவர்.



## புதிய வற்வரித் திருத்தங்கள் ஜூலை முதல் நடைமுறை!

கொழும்பு,மே 4

**திருத்தப்பட்ட பெறுமதி சேர்க்கப்பட்ட வரி ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு இதனை வெளியிட்டுள்ளது.**

இதன்படி, ஜூலை 1 முதல் மின்னணுத் தளங்கள் மூலம் வழங்கப்படும் சேவைகளுக்கு வற்வரி அறவிடப்படும். இதற்காக டிஜிற்றல் சேவைகள் மீதான வரிப்பதிவு மற்றும் கொடுப்பனவுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பிரதான சட்டத்தின் 10ஆவது பிரிவின் கீழ் வரிப்பதிவுக்கான வரம்பு குறைக்கப்பட்டுள்ளது. இதன்படி, வரி விதிக்கத்தக்க காலப்பகுதியின் முடிவில், இலங்கைக்குள் பொருள்கள் அல்லது சேவைகளின் விநியோகத்தின் மொத்த மதிப்பு 9 மில்லியன் ரூபாவைத் தாண்டியிருந்தால், அந்த நபர் வரிக்காகப் பதிவு செய்யப்படவேண்டும்.

அதேபோல், நிதிச் சேவைகள் மீதான வற் வரி வீதத்தை தற்போதுள்ள 18 சதவீதத்திலிருந்து 20.5 சதவீதமாக அதிகரிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. (ச-இ)

## சட்டவிரோத நிதி மோசடிகள்; 120 வெளிநாட்டவர்கள் கைது

கொழும்பு,மே 4

ராஜகிரியவில் சட்டவிரோத நிதி மோசடிகள் மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் சுமார் 120 வெளிநாட்டவர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சீனா, வியட்நாம், மலேசியா, மடகாஸ்கர், பிலிப்பைன்ஸ், தாய்லாந்து மற்றும் கம்போடியா போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து ஏராளமான கணினிகள் மற்றும் கைபேசிகளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது நடவடிக்கையின் போது இவர்களில் ஒரு குழுவினர் தப்பியோடியுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)

## மின்னல் தாக்கி பெண் உயிரிழப்பு!

கொழும்பு,மே 4

ஹபராதுவ, கொக்வத்த பிரதேசத்தில் உள்ள வீடொன்றின் மீது மின்னல் தாக்கியதில் அங்கிருந்த பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மற்றொரு பெண் படுகாயமடைந்துள்ளார். இதில் 26 வயதுடைய இளம் பெண்ணே உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் குறித்து ஹபராதுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)




## சைபர் மோசடி; சீனர்கள் கைது

கொழும்பு,மே 4

கணினிக் குற்றங்களுடன் தொடர்புடைய சந்தேகத்தின் அடிப்படையில் வெளிநாட்டுப் பிரஜைகள் 37 பேர் வலான மத்திய ஊழல் தடுப்புப் பிரிவினரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர். தலங்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மேற்கொண்ட விசேட சோதனையின் போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்ட அனைவரும் சீனப் பிரஜைகள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைக்காக தலங்கம பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ச-இ)



## சுற்றிவளைப்பு; 593 பேர் கைது

கொழும்பு,மே 4

பொலிஸ்மா அதிபரின் அறிவுறுத்தலுக்கமைய, நாடளாவிய ரீதியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது, 593 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன் மதுபோதையில் வாகனம் செலுத்திய 121 பேரும், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 88 பேரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பிற போக்குவரத்து குற்றங்களுக்காக 3,977 பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது (ச-இ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



## உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் அளம்பில் றோ.க.ம.வித்தி. சம்பியன்

முல்லைத்தீவு,மே 4
முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியின் பவளவிழாவை முன்னிட்டு, நடத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில், அளம்பில் றோமன் கத்தோலிக்க மகாவித்தியாலயம், முல்லைத்தீவு மகா வித்தியாலய அணிக்கு ஒரு கோல் அடித்து வெற்றிக்கிண்ணத்தைச் சுவீகரித்தது. இறுதிப்போட்டிக்குத் தெரிவான முல்லைத்தீவு மகாவித்தியாலய அணியினர் மற்றும் அளம்பில் றோ.க. மகாவித்தியாலய அணியினர் பாண்ட் வாத்திய அணியிசையுடன் அழைத்துவரப்பட்டு போட்டிகள் நேற்றுமுன்தினம் நடைபெற்றன.

வெற்றிவெற்ற அணிகளுக்கான பணப்பரிசில் உள்ளிட்ட வெற்றிக் கிண்ணம், பதக்கங்கள் என்பன விருந்தினர்களால் வழங்கப்பட்டன. பாடசாலை முதல்வர் ஜெயவீரசிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட உதவிச் செயலர் லிசோ கேகிதா, மூத்த உதைபந்தாட்ட வீரன் எஸ்.எல்.பதுறுதீன் மற்றும் அயற்பாடசாலை அதிபர்கள், திணைக்கள அதிகாரிகள் கலந்துகொண்டனர். (க-19)



## தேனிசை செல்லப்பாவுக்கு வவுனியா வடக்கில் அஞ்சலி

வவுனியா,மே 4
ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் எழுச்சிப் பாடல்கள் மூலம் மக்களின் மனங்களில் இடம்பிடித்த தேனிசை செல்லப்பாவுக்கு, வவுனியா வடக்கில் நேற்று முன்தினம் அஞ்சலி செலுத்தப்பட்டது. புளியங்குளம், பரசங்குளம் பகுதியில் அமைந்துள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வவுனியா வடக்குப் பிரதேசக் கிளைக் காரியாலயத்தில் இடம்பெற்ற நிகழ்வில் ஈகைச்சுடர் ஏற்றி, செல்லப்பாவின் உருவப் படத்துக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டது மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து அஞ்சலி உரைகள் இடம்பெற்றன. செல்லப்பாவின் வரலாற்றுக் குறிப்புகளும் பகிரப்பட்டன. நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், வவுனியா வடக்குப் பிரதேசசபை உறுப்பினர்களான சுசீலன், தனுசன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வவுனியா மாவட்ட மற்றும் வவுனியா வடக்குப் பிரதேச செயற்பாட்டாளர்கள் கலந்துகொண்டனர். (க-110,246)

## தீவகத்தில் மாடு திருட்டு

யாழ்ப்பாணம்,மே 4
தீவகம் அல்லைப்பிட்டிப் பகுதியில் மேய்ச்சலுக்குக் கட்டிவிடப்பட்ட, 80 ஆயிரம் ரூபா பெறுமதியான சுதேச இனக்கறுப்பு நிறப்பசு மாடு திருடப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (க-66)

## யாழ்.மாவட்ட கயிறு இழுத்தல் போட்டியில் உடுவில், சாவகச்சேரி அணிகள் சம்பியன்

யாழ்ப்பாணம்,மே 4
யாழ்.மாவட்டச் செயலக விளையாட்டுப் பிரிவினரால் நடத்தப்பட்ட கயிறு இழுத்தல் போட்டியில் உடுவில் மற்றும் சாவகச்சேரிப் பிரதேச செயலக அணிகள் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தன. வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுமதியுடன் நடத்தப்பட்ட ஆண்கள் பெண்களுக்கான கயிறு இழுத்தல் போட்டிகள் கோப்பாய் மகா வித்தியாலய மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றன.

இதில் ஆண்களுக்கான போட்டியில் உடுவில் பிரதேச செயலக அணி சம்பியன் கிண்ணத்தையும், கரவெட்டிப் பிரதேச செயலக அணி இரண்டாம் இடத்தையும் பெற்றன. பெண்களுக்கான போட்டியில் சாவகச்சேரிப் பிரதேச செயலக அணி சம்பியன் கிண்ணத்தையும், கோப்பாய் பிரதேச செயலக அணி இரண்டாம் இடத்தையும் பெற்றன. (க-422)



## இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். பிள்ளைகள்வழியில் வீண்செலவுகள் ஏற்படக்கூடும். வெளியிடங்களில் சாப்பிடுவதைத் தவிர்ப்பது நல்லது. மாலையில் வாழ்க்கைத்துணையின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**இடபம்:** காலையில் சற்றுச்சோர்வாக இருக்கும். பிற்பகலுக்குமேல் உற்சாகமும் மகிழ்ச்சியும் ஏற்படும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். தாயின்தேவையைப் பூர்த்திசெய்வீர்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**மிதுனம்:** மனதில்தைரியமும்தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். முக்கியமான முடிவுகளை எடுப்பதற்கு உகந்த நாள். கணவன் -மனைவிக்கிடையே ஏற்பட்ட சிறுசிறு பிணக்குகள் மறைந்து, அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கடகம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய நாள். தந்தையின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வீர்கள். திடீர்ச்செலவுகள் மனதை சஞ்சலப்படுத்தும். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும்.

**சிம்மம்:** காலையில் வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்குமேல் தொடங்குவது சாதகமாகமுடியும். தாய்வழி உறவுகளுக்காக செலவு செய்யவேண்டி வரும்.

**கன்னி:** எதிர்பாராத செலவுகள் ஏற்படும். ஆனால், போதுமான பணம் இருப்பதால் கடன் வாங்கவேண்டிய அவசியம் ஏற்படாது. மாலையில் வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

**துலாம்:** அதிர்ஷ்டகரமான நாள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. இன்று நீங்கள் எடுக்கும் புதிய முயற்சி வெற்றிகரமாகமுடியும்.

**விருச்சிகம்:** தந்தைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தந்தையின் தேவையை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**தனுசு:** உற்சாகமான நாள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும்.

**மகரம்:** இன்று எதிலும் சற்று பொறுமையுடன் செயற்படவேண்டிய நாள். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதை தவிர்ப்பது நல்லது.

**கும்பம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். எதிர்பாராதசெலவுகள்ஏற்பட்டாலும்தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். மாலையில் உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும்.

**மீனம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர்ச் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நண்பர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து கொடுப்பீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உள்ளூராட்சி வெளிவாரிப் பணியாளர்கள் நிரந்தர நியமனத்துக்கு விரைவில் தீர்வு!



## கடற்றொழில் அமைச்சர் உறுதி

**யாழ்ப்பாணம், மே 4**

**வடக்கு மாகாண உள்ளூராட்சி சபைகளில் உள்ள வெளிவாரிப் பணியாளர்களின் நியமனங்களில் காணப்படும், இழுபறிகள் தொடர்பில் விரைவில் தீர்வு பெற்றுத் தரப்படும் என்று அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் உறுதியளித்துள்ளார்.**

வலிகாமம் கிழக்குப் பிரதேசசபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஸுடன் இடம்பெற்ற சந்திப்பில் தொழிலாளர்களின் நியமனப்பிரச்சினை மற்றும் நடைமுறையில் உள்ள தடைகள் தொடர்பில் ஆராய்ந்தபோது இதனைத் தெரிவித்தார்.

180 நாள்களை நிறைவுசெய்தவர் களுக்கு நிரந்தர நியமனங்களை வழங்குவதற்காக அவ்வப்போது சுற்று நிருபங்கள் வெளியிடப்பட்டபோதும், எமது வடக்கு மாகாணத் தொழிலாளர்களால் பயனடைய முடிய வில்லை. முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கைப் பிரகாரம், பல்தேசியச் செயலணியின் ஊடாக இராணுவமயமாக்கப்பட்ட நியமனங்களை புகுத்துவதற்கு முயற்சிக்கப்பட்டது. அதனை நாம் எதிர்த்தோம். 2017ஆம் ஆண்டு அனுமதிக்கப்பட்ட ஆளணியின் பிரகாரம் வெற்றிடங்களை நிரப்ப நாம் கோரிக்கை முன்வைத்தும் இது வரையில் சாதகமான பதில்கள் கிட்டவில்லை. தற்போதைய அரசாங்கம் அறிவித்துள்ள 180 நாள் நியமனத்திலும் எமது உள்ளூராட்சித் தொழிலாளர்கள் உள்வாங்கப்படுவதற்கு தடைகள் உள்ளன. நாட்டின் பிற மாகாணங்களைவிட, வடக்கில் உள்ளூராட்சி சபைகள் பல ஆண்டுகளாக நியமனம் அற்றுள்ளன. இதனால் சபை நிதி இழப்பு மற்றும் சேவை வழங்களில் பாதிப்பு ஏற்படுகின்றது. தொழிலாளர்களின் தனிப்பட்ட வாழ்வும் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே பொருத்தமான முறையில் வடக்கில் உள்ள ஒரேயொரு அமைச்சர் என்ற வகையில் தீர்வைப் பெற்றுத்தரவேண்டும் என்று அமைச்சரிடம் தவிசாளர் கோரிக்கை முன்வைத்தார். இதற்குப் பதிலளித்த அமைச்சர், பொருத்தமான தீர்வொன்றை விரைவில் முன்வைப்ப தாகஉறுதியளித்தார்-என்றார். (கு)

**டிரைவர் (Driver) தேவை**

கட்டட நிர்மாண வேலைக்கு டிரைவர் (Driver) தேவை.

தொடர்பு: 077 9669 498

(CS 61367)A

**வேலையாட்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் பிரபல நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

1. **Driver** (கனரக வாகனம்) Heavy Vehicle) (2 years experience)
   இரண்டு வருட அனுபவம் இருத்தல் வேண்டும்
2. **House Keeping**
   (அறை பராமரிப்பாளர்கள்)
3. **Dish wash** (பாத்திரம் கழுவுபவர்கள்)
4. **Receptionist** (வரவேற்பாளர்)
5. **Account Assistant**
   (கணக்கு உதவியாளர்)

**தொடர்புகளுக்கு:**

**077 444 5262**

(CS 31746) A


# பாகிஸ்தான் தூதுவருடன் பிரதமர் ஹரிணி சந்திப்பு

கொழும்பு,மே 4



இலங்கை பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரிய மற்றும் இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் நய்யார் நசீர் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு அலரி மாளிகையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இலங்கையைப் பாதித்த 'டித்வா' சூறாவளியின் போது, பாகிஸ்தான் வழங்கிய தொடர்ச்சியான ஆதரவு மற்றும் மனிதாபிமான உதவிகளுக்காகப் பிரதமர் இதன்போது தனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டார். இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால நட்பு மற்றும் பரஸ்பர மரியாதை குறித்து இரு தரப்பினரும் நினைவு கூர்ந்தனர். இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை அடுத்த கட்டத்திற்குக் கொண்டு செல்வது குறித்து இந்தச் சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டது. (ச-இ)



மறைந்த பாடகர் தேனிசை செல்லப்பாவுக்கு, தாயக செயலணியின் கிளிநொச்சி கிளையி னரின் ஏற்பாட்டில் கிளிநொச்சி கூட்டு றவாளர் மண்டபத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டது. (க-113)

**மரண அறிவித்தல்**



பிறப்பு
09 . 11 . 1953

இறப்பு
02 . 05 . 2026

**குணபாலசிங்கம் திரேசா ஞானமணி**

இல.111, அம்பலவாணர் வீதி, உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குணபாலசிங்கம் திரேசா ஞானமணி அவர்கள் கடந்த 02.05.2026 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருளானந்தம் மரியம்மா தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான செல்லையா இராசமணி தம்பதியரின் அன்பு மருமகளும், குணபாலசிங்கம் (ஓய்வுநிலை அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், நிலானி (பிரான்ஸ்), நிசாந்தன், நிசாகரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், பீற்றர் (பிரான்ஸ்), பிரியா, ரூபி ஆகியோரின் மாமியாரும், டஸ்னி, டனிசா (பிரான்ஸ்), பிரஷ்ணவி, பிறணிசா, டில்சான் ஆகியோரின் பேர்த்தியும், போல் குணநாயகம், கமிலஸ் (ஜேர்மனி), ஸ்ரனி (ஜேர்மனி), ஞானறஞ்சினி, ஞானலதா (ஜேர்மனி), பவுஸ்ரீன் (ஜேர்மனி), ஞானரூபி (கனடா), ஞானசுலோஜனா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான நவரத்தினராசா, இரத்தினசிங்கம், இரத்தினகுமார், லோகநாதன் மற்றும் தனபாலசிங்கம், கிருஸ்ணவேணி (கனடா), இராமலட்சுமி, விஜயகுமாரி, ஜெயலலிதா, மோகனவனிதா, கோமதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (05.05.2026) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு உடுவில் தூய செபமாலை அன்னை ஆலயத்தில் இடம்பெற்று, பின்னர் மல்வம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
குடும்பத்தினர்.
T.P.No-076 9630 047

(CS 31748)A

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
19 . 03 . 1932



மறைவு
15 . 05 . 2025

## கார்த்திகேசு மகேஸ்வரி

ஆண்டு ஒன்றல்ல ஆயுள் முழுவதுமே
அம்மா உங்கள் நினைவுகளோ
அழியாத கோலங்களாய்
எம் உள்ளங்களில் நிலைத்து நிற்குமம்மா.

அம்மா கனிவான உங்கள் பார்வைதனை காணாது
ஏங்குகின்றோம்.

வாழ்க்கை எனும் படகதனில்
பல அலைகள் வந்தபோதும்
பக்குவமாய் எமை சுமந்து
பவ்வியமாய் கரைசேர்த்தீர்
கண்ணிற்குள் மணியாக எமைச்சுமந்த காலமதை
எண்ணும் போதெல்லாம் எம் கண்கள் குளமாகுதம்மா.

அன்புடனே எமை வளர்த்து
நல்லறிவையும் ஊட்டி, நீங்கள் அவனியிலே நாம்
வாழ, வழிசமைத்து கொடுத்துவிட்டு
என் கடமை முடிந்ததென்று இறைவன் பாதமதை தேடித்தான்
சென்றீர்களோ.
உங்கள் ஆன்மா சாந்தியடைய பிரார்த்தனை செய்கின்றோம்.

**ஓம் சாந்தி ! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

*என்றும் உங்கள் நினைவுகளை சுமந்து நிற்கும்*


**குடும்பத்தினர்**

மட்டுவில் மத்தி
தற்காலிக முகவரி:
202/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(cs 61364) (N-1)

# நீங்காத நினைவலைகள்

7ஆம் ஆண்டு நினைவஞ்சலி | 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி





## பொன்னையா கந்தசாமி

(ஓய்வுபெற்ற பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்)

அன்னை மடியில் 19.07.1947 — இறைவன் அடியில் 05.03.2019

## புஸ்பலீலாவதி (இராசாத்தி) கந்தசாமி

அன்னை மடியில் 25.09.1948 — இறைவன் அடியில் 15.04.2025

அப்பா அம்மா நீங்கள் எம்மை விட்டு பிரிந்து
இறைவனை சேர்ந்து எத்தனை வருடங்கள் சென்றாலும்
உங்கள் நினைவுகள் என்றென்றும்
எம்மை விட்டு அகலாது நிலைத்திருக்கும்

**உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்**

"புஸ்ப பவனம்"
கைதடி கிழக்கு,
கைதடி.

உங்கள் பிரிவால் துயருறும்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(CS61335) (N-1)

# மரண அறிவித்தல்

தோற்றம்
07 . 05 . 1959



மறைவு
02 . 05 . 2026

## யோகலிங்கம் யோகேஸ்வரி (மாலா)

இரண்டாம் ஒழுங்கை அரசடி நல்லூரைப் பிறப்பிடமாகவும் மணல்தறை வீதி, கந்தர்மடத்தை வதிவிடமாகவும் கொண்ட யோகலிங்கம் யோகேஸ்வரி நேற்றுமுன்தினம் (02.05.2026) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணேசையா - ஆசைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அரியகுட்டி - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற யோகலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், டிலானி (லண்டன்), ஜங்கரன் (முன்னாள் கிராம உத்தியோகத்தர் - நல்லூர் பிரதேச செயலகம், கனடா), ஜனார்த்தனன் (ஜேர்மன்), நிரோஜா ஆகியோரின் பாசமிகு தாயாரும், குணரட்ணம் (லண்டன்), தனுசா (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம் - உடுவில்), நளினி (ஜேர்மன்) ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்றவர்களான ஜெனறட்ணசிங்கம், சந்திரேஸ்வரன், விமலேஸ்வரன், சந்திரேஸ்வரி மற்றும் பாலேஸ்வரி (புன்னாலைகட்டுவன்), யோகேஸ்வரன் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் சகோதரியும், ஷரிசன் (லண்டன்), சாய்ஷன் (லண்டன்), திரிஷாணன், பிரனுசன், டிவிஷ்ணன் (ஜேர்மன்), கவிநயன் (ஜேர்மன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.05.2026) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்**
லமேஸ்- 077 [illegible]

38/ 32, மணல்தறை வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(cs 61366) N-1

# நல்லடக்க ஆராதனை அறிவித்தல்

"நல்ல போராட்டத்தை போராடினேன் ஓட்டத்தை முடித்தேன்
விசுவாசத்தை காத்துக்கொண்டேன்" II தீமோத்தேயு 04-07

நம்மோடு
31 . 08 . 1958



தேவனோடு
01 . 05 . 2026

## வண.போதகர். சுந்தரமூர்த்தி ஸ்ரீமுருகதாஸ் (யோனத்தான்)

(ஸ்தாபகர், தலைமைப் போதகர் - ஜெபவீடு சர்வதேச ஊழியங்கள்)

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் ஆறுகால்மடம் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வண.போதகர். சுந்தரமூர்த்தி ஸ்ரீமுருகதாஸ் (யோனத்தான்) அவர்கள் 01.05.2026 வெள்ளிக்கிழமை அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

போதகர் காலஞ்சென்றவர்களான சுந்தரமூர்த்தி - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், தெய்வநாயகி (நகோமி) அவர்களின் அன்புக் கணவரும், வண. போதகர். யோனகான் (நிறைவேற்றுப் போதகர் - ஜெபவீடு), யோனகா (Compassion International SriLanka), யோனதி, யோனதாப் (UK), ஜொனிதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், அன்சலின், போதகர். அன்ரு பானுசாலோன் (One Church AG Colombo), ஜோய்கரன் (நிறைவேற்று உத்தியோகத்தர் LOLC - யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஜோனஸ் மற்றும் மேசி பெனிக்கா ஆகியோரின் பாசமிகு பேரனும், சுந்தரமகேசன், (Canada), ரதிதேவி (UK), வோல்டர் ரகுநாதன் (Germany), அன்னராணி, சுந்தரரூபி, குகதாசன் (Italy) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவகுமாரி, வண. போதகர். மேவின் குணச்செல்வம் (ஸ்தாபகர், தலைமைப்போதகர் - எக்காளத்தொனி பூரண சுவிசேஷ சபை), இங்கெலோரே, காலஞ்சென்ற வினோதானந்தன் மற்றும் நாராயணப்பிள்ளை (போதகர் - விடுதலை ஐக்கிய ஊழியங்கள்), தயாபரி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

போதகரின் சரீரமானது இன்று (04.05.2026) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிமுதல் கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள எக்காளத்தொனி பூரண சுவிசேஷ திருச்சபையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (05.05.2026) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நல்லடக்க ஆராதனை நடைபெற்று, இராச பாதை இருபாலையில் அமைந்துள்ள கானான் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக கொண்டு செல்லப்படும் என்பதை போதகர்கள், உறவினர்கள், நண்பர்கள், திருச்சபையினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மேலதிக தொடர்புகளுக்கு:
**வண.போதகர். S.யோனகான் - 077 406 0912**
**N. ஜோய்கரன் - 077 528 1603**

தகவல்:
**குடும்பத்தினர்**

(cs 61361) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## மரண அறிவித்தல்

பிறப்பு
28 . 07 . 1958



இறப்பு
02 . 05 . 2026

### செல்வி. திருவருட்சோதி விஜயதெய்வேந்திரம்

அப்புக்காத்தர் வளவு, அராலி மத்தி, வட்டுக்கோட்டை.

அராலி மத்தி அப்புக்காத்தர் வீதி, வட்டுக்கோட்டையை சேர்ந்த காலஞ்சென்ற விஜயதெய்வேந்திரம் - தங்கதேவி தம்பதியரின் புதல்வி செல்வி. திருவருட்சோதி அவர்கள் கடந்த 02.05.2026 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் திருமதி.செ.கௌரி அவர்களின் அன்புச் சகோதரியும், திரு.விஷ்வலிங்கம் செல்வரத்தினம் (J.P) பிரபல ஆன்மீக நூலாசிரியரம், முன்னாள் பிரபல கணித விஞ்ஞான ஆசிரியர் அவர்கிளன் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.05.2026) திங்கட்கிழமை முற்பகல் 11.0 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அராலி தெற்கு பூனாவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
**திரு.வி.செல்வரத்தினம் (J.P)**
**அராலி மத்தி, வட்டுக்கோட்டை.**
**077 110 7249**

(CS 31747)A

## மரண அறிவித்தல்

தோற்றம்
29 . 11 . 1945



மறைவு
03 . 05 . 2026

### முத்துத்தம்பி ஜெயரட்ணம் (குழந்தை)

உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்துத்தம்பி ஜெயரட்ணம் நேற்று (03.05.2026) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் முத்துத்தம்பி - அன்னப்பிள்ளை தம்பதியினரின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற சிவனேஸ்வரியின் (பேபி) அன்புக் கணவரும், சிவஜெயந்தன், ஜெயந்தினி, சர்மிளா, கார்த்திகா, சிவப்பிரியா ஆகியோரின் அன்புத் தந்தையும், ராசினி, கிருஸ்ணவேணன், சுதாகரன், வருணன், ரிஷோகரன் ஆகியோரின் அன்பு மாமனும், காவியன், தேனுகா, யஷ்ணவி, கீரன், லதுசன், ஹரினா, பிரணவி, பிரீத்திகா, பிரஷிகா, அஷ்வின், அக்ஷிதா, ஹனுக்ஷா, யஷ்மிகா, சகீர்த்யா ஆகியோரின் பேரனும், அமரர் செல்வரட்ணம், அமரர் நாகம்மா, இராசரத்தினம், அமரர் சரஸ்வதி, அமரர் புண்ணியமூர்த்தி, நவரட்ணம், புஸ்பராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.05.2026) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் மு.ப. 11:00 மணியளவில் இடம்பெற்று தகனக்கிரியைகளுக்காக வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஒஸ்கா வீதி,
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

தகவல் :
**குடும்பத்தினர்**
**077 985 4699**

## மரண அறிவித்தல்

தோற்றம்
18 . 07 . 1985



மறைவு
06 . 03 . 2026

### இராஜேஸ்வரன் சியாம்ராஜ்

மண்டைதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட இராஜேஸ்வரன் சியாம்ராஜ் அவர்கள் கடந்த (06.03.2026) வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் இராஜேஸ்வரன் - சியாமளா தம்பதியரின் மூத்த புதல்வரும், காலஞ்சென்றவர்களான தருமராஜா - சுகிர்தமணி தம்பதியரின் அருமை மருமகனும், மிதிலாவின் பாசமிகு கணவரும், நிருபராஜ் (ஆசிரியர் - வவு/அல்ஹாபியா முஸ்லீம் மகா வித்தியாலயம்), சுகராஜ் (கிராம சேவையாளர் - நயினாதீவு), கபில்ராஜ், வினுராஜ் ஆகியோரின் அருமை அண்ணனும், காலஞ்சென்ற சச்சிதானந்தம் மற்றும் வர்ணலிங்கம், சசிகலா (ஓய்வுநிலை நூலக உதவியாளர்), வத்சலா (பிரான்ஸ்), காலஞ்சென்ற ராதிகா ஆகியோரின் பெறா மகனும், சந்தானலெட்சுமி (பிரான்ஸ்), வர்ணலெட்சுமி, ஜெயமாலினி, முரளிதரன், காலஞ்சென்ற சிறீதரன் மற்றும் பரணிதரன் (கனடா) ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான தியாகராசா சின்னம்மா மற்றும் காலஞ்சென்றவர்களான கனகராசா இரத்தினேஸ்வரி ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.05.2026) செவ்வாய்க்கிழமை இலங்கை நேரப்படி பி.ப 2.00 மணியளவில் East Lancashire crematorium cemetery road radcliffe, m26 4eu UK இல் நடைபெறும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**சுதுமலை வீதி, தாவடி.**
**077 948 5557**
**0044 7466 906 406 - சதன்**
**0044 7387 507 629 - சிறி** (CS 31745)A

தகவல்
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

தோற்றம்
21 . 09 . 1944



மறைவு
03 . 05 . 2026

### இராசரத்தினம் தியாகராஜா

வீமன்காமம் வடக்கு, தெல்லிப்பளையை பிறப்பிடமாகவும், வட்டு தென் மேற்கு, வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் தியாகராஜா அவர்கள் நேற்று (03.05.2026) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசரத்தினம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பொன்னுச்சாமி - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், சுசிலாதேவியின் அன்புக் கணவரும், நவநீதன் (UK), காயத்திரி (France), கோபிநாத், பிரசன்னா (Germany) ஆகியோரின் அன்புத் தந்தையும், தர்மிகா (UK), சுஜணன் (France) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் ஜெயலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், மகேஸ்வரியின் அன்பு மைத்துனரும், அமிஷா, அபினேஷ், ராசிகன் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.05.2026) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**பங்குரு வீதி,**
**வட்டுதென்மேற்கு,**
**வட்டுக்கோட்டை.**

தகவல்
**குடும்பத்தினர்.**
(CR 47486)A **077 6533 886**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வலிகாம வலயத்துக்குட்பட்ட 20 வயதின் கீழ் ஆண்களுக்கான கபடிப் போட்டியில், நடேஸ்வரக் கல்லூரி முதலாமிடத்தைப் பெற்று, மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது. (க-555)



வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரர் ஆலயப் பிரதோஷ விரத உற்சவம் கடந்த புதன்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது. அபிஷேகம், சிறப்புப் பூஜை வழிபாடு, வசந்த மண்டபப் பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரப் பெருமான் அடியவர்கள் புடைசூழ உள்வீதி உலா வந்தார். (எ-41-66)



வரலாற்றுப் பிரசித்தி பெற்ற வல்வெட்டித்துறை அருள்மிகு முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்தப் பெருவிழாவின் பன்னிரண்டாம் நாள் காலை உற்சவமான புலிவேட்டைத் திருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. (எ-41-100)


## மானிப்பாய் பிரதேசசபையினரால் பாதீனிய ஒழிப்புத்திட்டம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 4

மானிப்பாய் பிரதேசசபை அமர்வில் முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு அமைவாக, பாதீனிய ஒழிப்பு வேலைத்திட்டம் உயரப்புலத்தில், அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வெட்டப்பட்ட பாதீனியம், வேறு இடங்களுக்குப் பரவாமல் இருப்பதற்காக அந்த இடத்திலேயே தீவைத்து அழிக்கப்பட்டது. மானிப்பாய் பிரதேசசபையின் தவிசாளர், உபதவிசாளர், உறுப்பினர்கள் மற்றும் செஞ்சிலுவைச் சங்கத்தினர் இணைந்து இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்துள்ளனர். (க-27)



வரலாற்றுப் பிரசித்தி பெற்ற வல்வெட்டித்துறை அருள்மிகு முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்தப் பெருவிழாவின் பதினோராம் நாள் மாலை உற்சவமான பூங்காவனத் திருவிழா கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. (எ-41-100)



## மே தின ஒன்றுகூடலும் பீடாதிபதி வரவேற்பும்

யாழ்ப்பாணம், மே 4

மே தினத்தைச் சிறப்பிக்கும் ஒன்றுகூடலும், தேசிய கல்வியியற்கல்லூரியின் புதிய பீடாதிபதியாகப் பொறுப்பேற்றுள்ள அருணாசலம் குகனுக்கான வரவேற்பு நிகழ்வும், கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றன. கலாசாலை முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், ஆசிரியத்துவத்தைப் போற்றுவோம் எனும் தலைப்பிலான ஆவணக் காணொளி கலாசாலையின் ஆங்கிலநெறி ஆசிரிய மாணவி கௌசிகா நிரோஜனால் தயாரிக்கப்பட்டு, காட்சிப்படுத்தப்பட்டது. மே தினம் தொடர்பில் கலாசாலையின் ஆரம்பக் கல்விநெறி ஆசிரிய மாணவி ஜெயராணி தினேஷ் சிறப்புரை ஆற்றினார். தொடர்ந்து கலாசாலையின் பிரதி முதல்வர் கணபதிப்பிள்ளை செந்தில்குமரன் அதிதிக்கான அறிமுக உரையையும், புதிய பீடாதிபதி குகன் அதிதிப் பேச்சாளர் உரையையும் நிகழ்த்தினர். (க-66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பலாலியில்...

தையிட்டியில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
வலி.வடக்கில் இராணுவ மருத்துவமனை ஒன்று தற்போது கட்டப்பட்டு வருகின்றது. அது தற்போதைய ஆட்சியிலேயே நடைபெறுகின்றது. இந்த மருத்துவமனை பிரச்சினையும் எதிர்காலத்தில் தையிட்டி விகாரையைப் போன்று மாறுமா? என ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு பதிலளித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது மயிலிட்டி காணிக்கைமாதா கோயில், அருகில் உள்ள சேமக்காலை, மயிலிட்டியின் கடற்கரைப் பிரதேசங்கள் என்வற்றை விடுவிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
தையிட்டி விகாரைப் பிரச்சினை மதத்துடன் தொடர்புடையது என்பதால் நிதானத்துடன் கையாள வேண்டியிருக்கின்றது. தையிட்டி விகாரையை வைத்து அரசியல் ஒன்று செய்யப்படுகின்றது என்பது எமக்கும், ஜனாதிபதிக்கும் நன்றாகத் தெரிகின்றது.
மக்களின் காணிகளை மக்களுக்கே வழங்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாக இருக்கின்றது. இராணுவத்தின் வசமிருந்த காணிகள், கட்டடங்கள்
விடுவிக்கப்பட்டிருக்கின்றன. அங்குள்ள கட்டடங்களை இராணுவத்தினர் அகற்றிவிட்டுச் செல்கின்றனர். அவற்றை அவ்வாறே விட்டுச் செல்ல வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டிருக்கின்றது.
வலி.வடக்கில் அமைக்கப்படும் இராணுவ மருத்துவமனையைச் சூழவுள்ள காணிகளும் விடுவிக்கப்படும். அவற்றை அரசுடைமையாக்கத் தீர்மானிக்கவில்லை. - என்றார். (அ-எ-26)

## வீதி...

தையிட்டில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது அண்மையில் மக்களின் காணிகளை மக்களிடமே ஒப்படைப்பதற்காக காணிகள் அளவீடு செய்ய எடுக்கப்பட்ட முயற்சிகள் சில அரசியல் தரப்புகளால் குழப்பப்பட்டிருந்தன. காணி அளவீடுகள் தடைப்பட்டிருந்தாலும் கொழும்பில் இருந்து வந்திருந்த குழு அங்குள்ள பவானி வீதியை அளவீடு செய்திருந்தது. அந்த வீதியை விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் அரசாங்கத்தால் ஆராயப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படவிருந்தது.
இதை அறிந்துகொண்ட சில அரசியல் தரப்புக்கள் அதைக் குழப்பும் வகையில் தற்போது செயற்படுகின்றன. இந்த விகாரை எமது ஆட்சிக்காலத்தில் ஏற்படுத்தப்படவில்லை. கடந்த கால அரசாங்கங்களின் ஆட்சிக்காலத்திலேயே ஏற்படுத்தப்பட்டிருந்தது. அரசாங்கம் என்ற ரீதியில் நாம் இந்த விடயத்தில் நிதானமாகச் செயற்பட வேண்டியுள்ளது. ஆனால் தெற்கில் உள்ள இனவாத அரசியல் தரப்புகளுக்கு வாய்ப்பை ஏற்படுத்தும் வகையிலேயே இங்குள்ள சில அரசியல்தரப்புகள் செயற்படுகின்றன. இந்தப் பிரச்சினை தீராத பிரச்சினையாக இருக்க வேண்டும் என்று அவர்கள் விரும்புகின்றனர். ஆனால் மக்களின் காணிகளை சுவீகரிக்கும் திட்டம் எம்மிடம் இல்லை. மக்களின் காணிகளை துரிதமாக விடுவிப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்- என்றார். (அ-எ-26)

## ஜனாதிபதி...

மன்றத்தில் விசேட உரை ஒன்றை ஆற்றவுள்ளார்.
இந்த மோசடி தொடர்பில் நிறுவன மட்டத்தில் உள்ளக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்ற நிலையில், குற்றப்புல னாய்வுத் திணைக்களம் ஊடாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று திறைசேரியின் செயலாளர் தெரிவித்துள்ளார்.
நாடாளுமன்றம் இன்று கூடவுள்ள நிலையில், இந்த நிதி மோசடி விவகாரம் தொடர்பில் நிதி அமைச்சரான ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க விசேட உரையாற்றவுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## காலி...

ஊடகப் பிரிவு தெரிவித்தது.
போதைப்பொருள் குற்றச்சாட்டில் கைதானநிலையில்விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த, அவர்கள் தப்பியோட முற்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. சிறைச்சாலை அதிகாரிகளால் நடத்தப்பட்ட இந்த துப்பாக்கிச் சூட்டில், கைதி ஒருவரின் தோள்பட்டையில் காயம் ஏற்பட்டுள்ளது என்றும், காயமடைந்த நபர் சிகிச்சைகளுக்காக காலி கராப்பிட்டிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## இலங்கை...

மாலைதீவு ஜனாதிபதி உள்ளிட்ட தூதுக்குழுவினரை வரவேற்பதற்காகப் பிரதமர் ஹரிணி அமரசூரிய உட்பட முக்கியமான பிரமுகர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்துக்குச் சென்றிருந்தனர்.
மாலைதீவு ஜனாதிபதி தனது இலங்கைப் பயணத்தை நிறைவு செய்து கொண்டு, நாளைமறுதினம் மீண்டும் மாலைதீவு நோக்கிப் புறப்படவுள்ளார். (அ-எ-இ)

## மாயமான...

மின்னஞ்சல் ஊடுருவல் மற்றும் தகவல் திருட்டு ஆகியவற்றைக் கண்டறிவதில் நிபுணத்துவம் பெற்ற அமெரிக்க சைபர் பாதுகாப்பு நிறுவனம் ஒன்றின் ஆலோசனைகளும் இந்த விசாரணைகளுக்கா கப் பெறப்பட்டுள்ளன.
இந்த மோசடி மின்னஞ்சல்கள் எங்கிருந்து ஆரம்பிக்கப்பட்டன, திருடப்பட்ட பணம் தற்போது எங்கே உள்ளது அல்லது இதன் பின்னணியில் உள்ள நபர்கள் யார் என்பது தொடர்பான தகவல்கள் இதுவரை கண்டறியப்படவில்லை. இது தொடர்பாக மத்திய வங்கியின் நிதி புலனாய்வுப் பிரிவும் விசாரணைகளை முன்னெடுத்து வருகிறது. தற்போது அவுஸ்திரேலிய அதிகாரிகளின் ஒத்துழைப்பும் கிடைத்துள்ளதால், இது ஒரு சர்வதேச மட்டத்திலான விசாரணையாக மாறியுள்ளது.
கடந்த ஜனவரி மாதமே இந்த சைபர் தாக்குதல் குறித்து நிதி அமைச்சு அறிந்திருந்த போதிலும், கடந்த மார்ச் மாதம் 28 ஆம் திகதியே குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் உத்தியோகபூர்வமாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
வெளிநாட்டுக் கடன் திருப்பிச் செலுத்துதல் தொடர்பான சில ஆவணங்களும் இந்த சைபர் குற்றவாளிகளால் திருடப்பட்டிருக்கலாம் அல்லது பிரதி எடுக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளதால், இனிவரும் காலங்களில் மேற்கொள்ளப்படும் அனைத்துப் பணப் பரிமாற்றங்களுக்கு முன்னரும், மின்னஞ்சல்கள் மற்றும் தரவுகளைத் தீவிரமாகப் பரிசோதிக்க வேண்டும் என்று சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.
அதேவேளை, பிரான்ஸ் நாட்டுடனான கடன் ஆவணங்கள் காணாமல் போயுள்ளன என்று வெளியான செய்திகளை நிதி அமைச்சு மறுத்துள்ளது. கடன் வழங்குநர்களுடன் முறையான தொடர்புகளைப் பேணி வருவதாகவும், கடன் தவணைகள் முறையாகச் செலுத்தப்படுகின்றது என்றும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (அ-எ-இ)

## பெற்றோல்...

தொன் பெற்றோல் மற்றும் 20,000 மெட்ரிக் தொன் டீசல் இரண்டாவது கப்பலில் 35,300 மெட்ரிக் தொன் பெட்றோல் கொண்டுவரப்பட்டுள்ளன. இவை தவிர, தலா 37,000 மெட்ரிக் தொன் டீசல் அடங்கிய மேலும் இரண்டு கப்பல்கள் இந்த மாத இறுதியில் வரவுள்ளன என்று இலங்கை பெற்றோல் களஞ்சிய முனையத்தின் நிறைவேற்று பணிப்பாளர் ஹேமந்த குமார தெரிவித்துள்ளார்.
தற்போதுள்ள கையிருப்பு மற்றும் திட்டமிடப்பட்ட இறக்குமதிகள் மூலம் எதிர்வரும் ஜூலை மாதம் வரை தட்டுப்பாடின்றி எரிபொருளை வழங்க முடியும் என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் போதுமான அளவு விநியோகம் தொடர்கின்றது. கையிருப்பு நிலை சீராக உள்ளதால், தற்போது நடைமுறையிலுள்ள கியூ. ஆர். எரிபொருள் ஒதுக்கீட்டை அதிகரிப்பது தொடர்பிலும் அதிகாரிகள் ஆலோசித்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## வாகன...

அத்துடன் மே மாதம் முதல் சமூக பாதுகாப்பு வரி 2.5 வீதம் வரை உயர்த்தப்பட்டிருப்பதும் வாகன விலையேற்றத்துக்கு ஒரு காரணமாக அமையும். இது தொடர்பில் ஆய்வு செய்யுமாறு அரசாங்கத்திடம் கோரியுள்ளோம் -என்றார். (அ-எ-இ)

## வடக்கு...

நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.
இதனால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட நாட்டின் பல பகுதிகளுக்கும் பரவலாக மிதமானது முதல் சற்றுக் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. எதிர்வரும் 7 ஆம் திகதி வியாழக்கிழமை முதல் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட நாட்டின் பல பகுதிகளுக்கும் தற்போது நிலவும் அதிக வெப்பமான வானிலை சற்றுத் தணியுமென எதிர்பார்க்கப்படுகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ-எ-66)

## மீனவர்கள்....

கடற்தொழிலுக்கு சென்ற இரண்டு கடற்தொழிலாளர்கள் இதுவரையும் கரை திரும்பவில்லை என நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
மாயமான மீனவர்களைத் தேடும் நடவடிக்கைகளில் அந்தப் பகுதி மீனவர்கள் ஈடுபட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-19)

## மயங்கி...

(வயது-67) என்பவரே உயிரிழந்துள்ளார்.
கடந்த முதலாம் திகதி கடைக்குச் சென்றபோது வீதியில் தடுமாறி மயங்கி வீழ்ந்து காயமடைந்துள்ளார். இவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.
இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந. பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-எ-26)

காணி விற்பனைக்குண்டு
காரைநகர் நடுக்குத்தெரு சம்பந்தர் கண்டியில் 14 பரப்புக் காணி விற்பனைக்குண்டு
தொடர்பு: 071 764 8884

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கண்ணீர் அஞ்சலி



அமரர்

## வல்லிபுரம் பஞ்சநாதன்

நேற்றுப் போல் எல்லாம் எம்
நெஞ்சோடு நினைவிருக்க
காற்றுப் போல் கண்களுக்கு
தோன்றாமல் நிற்கின்றீர்
தோற்றுப் போனது எம்
எதிர்பார்ப்பு எல்லாம் தான்

ஆயிரமாயிரம் வினாக்கள்
விடைசொல்ல ஒரு நிமிடம் வாரீரோ...?
விளையாட்டாகினும் கூட
சில மணித்துளிகள்
விழி அசைக்க மாட்டீரோ...?
காலங்கள் பல சென்றாலும்
கடைசி வரை உங்கள் நினைவு
எம் நெஞ்சை விட்டு அகலாது!

தோற்றம் 19.12.1951 மறைவு 30.04.2026

**பிரிவால் துயருறும் பெறாமக்கள்**
பா.லக்ஷயினி, பா.அர்சிதாயினி,
பா.அலக்சன், பா.டுலக்சன்

# மரண அறிவித்தல்



தோற்றம் 19.12.1951 மறைவு 30.04.2026

## வல்லிபுரம் பஞ்சநாதன்

(Jolly Restaurant உரிமையாளர் - திருநெல்வேலி)

திருநெல்வேலி வளாக வீதியைப் பிறப்பிடமாகவும், பொற்பதி வீதி கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் பஞ்சநாதன் அவர்கள் கடந்த 30.04.2026 வியாழக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - நாகம்மா தம்பதியரின் செல்வப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - அகிலாண்டேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மருமகனும், நித்தியானந்தராணி (றஞ்சி) அவர்களின் அன்புக் கணவரும், பிரியங்கா (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதி பிரதம செயலாளர் அலுவலகம் - நிர்வாகம்), பிரசாந் (சட்டத்தரணி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, பத்மராஜா, பவானிதேவி மற்றும் பாக்கியநாதன் (பேபி - பிரான்ஸ்), பவளராணி (பிரான்ஸ்), பராசக்தி (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரரும், துரைசிங்கம், மாணிக்கராஜா, சுந்தரலிங்கம், காலஞ்சென்ற சந்திரசேகரம், ரேவதி (றைலா), விஜயா, சூரியபிரபாகரன், பசுபதிபிள்ளை, காளியம்மையார், வினோதினி, காலஞ்சென்ற சத்தியரூபராணி, சூரியபிரபாலினி, வினோகரன் ஆகியோரின் மைத்துனரும், சத்தியரூபன், காந்தரூபன், புவனரூபன், கடம்பரூபி, பத்மரூபி, அச்சுதன்,அரங்கனா, நிறோஜன், நிறாதன், சிந்து, பைரவி, பாரதி, விவேக், வேதிகா, ஆர்த்திகா, சசிகலா, ரதி, சிவகலா, விஸ்ணு, டந்தோ, அமீர், தவரூபன், டிலாஜினி, சாரங்கா, ரசிகரன் ஆகியோரின் அன்புமாமனாரும், அன்புராஜ், அற்புதராணி, லோகரூபன், அம்பிகா, சியாமளா, டினேஸ், லோஜி, லக்ஸாயினி, அச்சுதாயினி, அலெக்ஸன், டிலக்ஸன் ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும், சுஞ்ஜீவன், சதீசன், மாதுசா, மௌலியா, கல்ப்பனா, தர்சனா, அஜந்தனா, நிதர்சன், கிரிசாந்தி, சஜனி, ஜெயதீபன், ஜெயதுர்க்கா, சதீஸ், பிரதீஸ், டிலான், சுதா, கீர்த்தா ஆகியோரின் அன்பு சித்தப்பாவும், ஜதுசன், ஜதீசன், பர்மிலா, சஜீகன், பார்கவி, ராகவி, தரணிகா, தக்சனா, சந்தோஸ், கேசசி, வைசாலி அபிசாலி, ஜஸ்மின், இசான், சயான் ஆகியோரின் பாசமிகு தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.05.2026) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

27, பொற்பதி வீதி,
கொக்குவில்.

தகவல்:
**குடும்பத்தினர்.**
**077 521 4745**

(N-1)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் [illegible] 361 [illegible] உள்ள அவர்களது பணிமனையில்04.05. 2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media